# சிவில் விமானசேவைகள் அமைச்சு

## தொனிப்பொருள்

''இலங்கை நாடு தெற்காசிய பிராந்தியத்தின் அதிகப்படியான நட்புணர்வுடனும், போட்டித்தன்மைமிகு வான் மையமாகவும் மேம்படுத்துதல்''.

## பணி

''விமானசேவைத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் நோக்கில், போட்டித்தன்மையை முறியடிக்கக்கூடிய தரமான விமானசேவை ஏற்படுத்துவதன் பொருட்டு உடந்தையாயிருக்கும் சிறந்த கொள்கை வரம்பொன்றினை உருவாக்குவதும், வினைத்திறன் மிகு இயக்கமுறையொன்றினை ஏற்படுத்துவதேயாகும்

**அமைச்சின் குறிக்கோள்கள்**

- விமானசேவை நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்துதல்.
- அமைச்சின் கீழுள்ள தாபனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- சர்வதேச தரங்களுக்கு இணங்கும் வகையில் உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் போட்டித்தன்மை மிகு விமானசேவை வசதிகள் கொண்டு நடாத்துதல்
- விமானப் பயணிகள் மற்றும் வான் சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
- உள்ளக விமானசேவை நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்தல்
- இரு தரப்பு மற்றும் பலதரப்பட்ட சர்வதேச வான் கலந்துரையாடல்கள் பல்வேறு குடியரசுக்களின் வான் போக்குவரத்து அதிகாரிகளுடன் நடாத்துதல்
- விமானசேவைத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும்போது ஏனைய அமைச்சுக்களுடனான உள்ளக உறவுகளைப் பேணுதல்.

# பௌதீக செயலாற்றுகை 2014

1) விமானசேவைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக துறைவாரியான அனைத்து நடவடிக்கைளை வினைத்திறன் மற்றும் விளைவு பெருக்கமுடைய விதத்தில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு தேவையான சட்ட ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல், புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல்.

2) இவ்வருடத்தில் சர்வதேச ரீதியாக நன்மை பயக்கக்கூடிய வான் சேரிடங்களைப் போன்று நன்மைபயக்கக்கூடிய வான் பயணத் தடவைகள் அதிகரித்துக் கொள்வதற்காக அந்தந்த நாடுகளுடன் இரு தரப்பு விமானசேவை கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்.

   - உடன்படிக்கைகளை புதுப்படுத்திய நாடுகளாக சர்பியா, பல்கேரியா,பிரசீல், ஹங்கேரி, ஐஸ்லாந்து,ஈரான், ஜமெய்கா, கென்யா போலாந்து மற்றும் பிரசீல்

   - புது உடன்படிக்கைகள்: போலாந்து

3) மட்டக்களப்பு உள்ளக விமானநிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒத்துழைப்பை வழங்குகின்ற இலங்கை விமானப் படை மற்றும் தெரு அபிவிருத்தி அதிகாரசபையினை ஒருங்கிணைத்து கருத்திட்டத்தினை வழிநடாத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

4) பயணிகள் போக்குவரத்துக்கென உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளை பரவலாக்கி மற்றும் வான் பயணிகளுக்கு வேண்டிய வசதிகளை அதிகரித்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய இரண்டாம் கட்டம் இரண்டாம் நடவடிக்கை நிர்மாணிப்பு கருத்திட்டத்தின் தாபன ஒருங்கிணைப்பு மற்றும் கருத்திட்டத்தினை வழிநடாத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்குதல்.

5) அமைச்சின் கீழுள்ள தேசிய விமானசேவையான ஸ்ரீலங்கன் விமானசேவைக் கம்பனி மற்றும் குறைசெலவு விமானசேவையான மிஹின்லங்கா (தனியார்) கம்பனுக்கென வழங்கப்படுகின்ற மூலதன பங்களிப்பு 2014 வருடத்திலும் வழங்குவதற்கு தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். மேலும் குறித்த நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வழிகாட்டுதல்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

6) ஸ்ரீலங்கன் விமானசேவைக் கம்பனியின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைமைப்படுத்தி இலாபம் உழைக்கும் நிறுவனமாக செயலாற்றுவதற்கு நிறுவனத்தின் ஐந்தாண்டு தொழில்முயற்சிகள் திட்டம் (Five Year Business Plan) புதுப்பிப்பதற்கு குறித்த மதியுரைக் குழுவிற்காக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) தேசிய நிகழ்ச்சித்திட்டமான தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துக்காக அமைச்சின் கீழுள்ள தாபனங்களை ஒருங்கிணைத்து இவ்வருடத்தில் தேசத்தின் மகுடம் நடைப்பெறும் கால எல்லைக்குள் சமுக உபசரணை நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

8) அமைச்சின் கீழுள்ள தாபனங்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை தலையீட்டுடன் குறித்த அதிகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

9) விமான மையத்தினை நோக்கி செல்லும் பயணத்தில் அமைச்சின் விடய பரப்பிற்குரிய விமானசேவை அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏனைய வர்த்தக, அறிவு, வலுச்சக்தி கப்பல்துறை நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களுக்காக ஒத்துழைப்பை வழங்குதல்.

# ஒதுக்கீட்டுக் கணக்கு - 2014

**செலவினத் தலைப்பு இல.: 176** **அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :** சிவில் விமானசேவைகள் அமைச்சர்

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல.: | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு | (5) மொத்தச் செலவினம் | (6) நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | **மீண்டுவரும்** | | | | | | | |
| 1 | தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 171,000,000 | - | (2,100,000) | 168,900,000 | 160,310,753 | 8,589,247 | **2** |
| | **உபமொத்தம் (மீண்டுவரும்)** | **171,000,000** | **-** | **(2,100,000)** | **168,900,000** | **160,310,753** | **8,589,247** | |
| | **மூலதனம்** | | | | | | | |
| 1 | தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 7,500,000 | - | 2,100,000 | 9,600,000 | 7,856,335 | 1,743,665 | **4,5** |
| 2 | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 13,500,000,000 | 13,112,908,000 | | 26,612,908,000 | 26,445,778,052 | 167,129,948 | **19** |
| | **உபமொத்தம் (மூலதனம்)** | **13,507,500,000** | **13,112,908,000** | **2,100,000** | **26,622,508,000** | **26,453,634,387** | **168,873,613** | |
| | | | | | | | | |
| | **மொத்த கூட்டுத்தொகை** | **13,678,500,000** | **13,112,908,00** | **-** | **26,791,408,000** | **26,613,945,140** | **177,462,860** | |

**இந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் இணைந்த பகுதியாக விபரமான நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளும் ஏனைய விபரமான கணக்கீட்டுக் கூற்றுக்களும் டிஜிஎஸ்ஏ 02 முதல் 18 வரையிலான படிவத்தில் பக்கம் .02 முதல் 10வரையிலும் ஏனைய குறப்புக்கள் பக்கம் 33 முதல் 37 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

**இந்தக் கணக்கிலுள்ள இலக்கத் தொகைகள், ஏனைய விபரமான கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்கள் யாவும் சரியானவை என்றும், தொடர்புடைய கணக்குகள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் சரியாகவும் காணப்படுகிறது என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.**

பிரதான கணக்கீட்டு அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :

கணக்கீட்டு அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :

பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:
திகதி:

# கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 176 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவைகள் அமைச்சர்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

| கருத்திட்ட இல. தலைப்பு மற்றும் வேதனாதிகள், அனைத்து கருத்திட்டங்களுக்குமான ஏனைய கட்டணங்கள் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் ± | நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் ± | மொத்த தேறிய ஏற்பாடு (1,2,3) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| <u>கருத்திட்ட இல 01. மற்றும் பெயர் அமைச்சின் அலுவலகம்</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 17,200,000 | - | 2,153,000 | 19,353,000 | 18,982,021 | 370,979 |
| ஏனைய செலவுகள் | 37,680,000 | - | (11,585,500) | 26,094,500 | 25,428,260 | 666,240 |
| **உப மொத்தம்** | **54,880,000** | **-** | **(9,432,500)** | **45,447,500** | **44,410,281** | **1,037,219** |
| கருத்திட்ட இல 02 மற்றும் பெயர் <u>அமைச்சின் நிருவாகம் மற்றும் தாபனசேவை</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 28,350,000 | - | 410,000 | 28,760,000 | 25,184,957 | 3,575,043 |
| ஏனைய செலவினங்கள் | 87,770,000 | | 6,922,500 | 94,692,500 | 90,715,515 | 3,976,985 |
| **உப மொத்தம்** | **116,120,000** | | **7,332,500** | **123,452,500** | **115,900,472** | **7,552,028** |
| **மொத்தத் தொகை** | **171,000,000** | **-** | **(2,100,000)** | **168,900,000** | **160,310,753** | **8,589,247** |

பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி:

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 176 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவைகள் அமைச்சர்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் 01 அமைச்சு அலுவலகம்

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | <u>மூலதன செலவுகளின் விபரம்</u> | | | | | |
| | | | <u>மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பும் மேம்பாடும்</u> | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்பும் | 100,000 | - | 100,000 | 100,000 | - |
| 2002 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 100,000 | - | 100,000 | 56,842 | 43,158 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 2,500,000 | 1,850,000 | 4,350,000 | 3,331,619 | 1,018,381 |
| | | | <u>மூலதன சொத்துக்களைக் கையேற்றல்</u> | | | | | |
| 2102 | | 11 | மரத்தளவாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 1,000,000 | - | 1,000,000 | 885,239 | 114,761 |
| 2103 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 500,000 | - | 500,000 | 498,926 | 1,074 |
| | | | மொத்தம் | **4,200,000** | **1,850,000** | **6,050,000** | **4,872,626** | **1,177,374** |

பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி:

## கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

**செலவினத் தலைப்பு இல.: 176 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவைகள் அமைச்சர்**
**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : 02 அமைச்சு நிருவாகம் மற்றும் தாபன சேவை**

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **மூலதன செலவுகளின் விபரம்** | | | | | |
| | | | **மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பும் மேம்பாடும்** | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்பும் | 100,000 | 250,000 | 350,000 | 348,030 | 1,970 |
| 2002 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 100,000 | | 100,000 | 93,512 | 6,488 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | | 1,000,000 | 992,725 | 7,275 |
| | | | **மூலதன சொத்துக்களைக் கையேற்றல்** | | | | | |
| 2102 | | 11 | மரத்தளவாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 500,000 | | 500,000 | 406,742 | 93,258 |
| 2103 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 1,000,000 | | 1,000,000 | 1,000,000 | - |
| | | | **திறன் விருத்தி** | | | | | |
| 2401 | | 11 | பயிற்சியளிப்பும் திறன் விருத்தியும் | 600,000 | | 600,000 | 142,700 | 457,300 |
| | | | **மொத்தம்** | **3,300,000** | **250,000** | **3,550,000** | **2,983,709** | **566,291** |

பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி:

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 176 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவைகள் அமைச்சர்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | <u>மூலதனமாக்கல் -ஸ்ரீலங்கன் விமானசேவைகள் கம்பனி</u> | | | | | |
| 7 | 2301 | 11 | மூலதனமாக்கல் | 13,000,000,000 | 6,584,686,000 | 19,584,686,000 | 19,584,685,242 | 758 |
| | | | <u>மூலதனமாக்கல் -மிஹின்லங்கா (தனியார்) கம்பனி விமானசேவைகள் கம்பனி</u> | | | | | |
| 8 | 2301 | 11 | மூலதனமாக்கல் | - | 6,528,222,000 | 6,528,222,000 | 6,528,221,130 | 870 |
| | | | உள்நாட்டு விமானநிலைய அபிவிருத்தி கருத்திட்டம் | 500,000,000 | - | 500,000,000 | 332,871,680 | 167,128,320 |
| 9 | 2104 | 11 | கட்டிடங்களும் கட்டமைப்பும் | | | | | |
| | | | **மொத்தம்** | 13,500,000,000 | 13,112,908,000 | 26,612,908,000 | 26,445,778,052 | **167,129,948** |

பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி:

# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

## நோக்கு

''தேசிய பொருளாதார அபிவிருத்தியின் பிரதான உயிர் நாடியாக செயற்படுதல்.''

## பணிகள்

''தளத்தகை திட்டமிடுகை மற்றும் பலம் பொருந்திய நிர்வாகத்தின் ஊடாக சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பின்பற்றி பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் செயற்திறன் மிக்க தேசிய சிவில் விமானச் சேவை கைத்தொழிலுக்கு அனுசரனை வழங்குதல்.''

**நோக்கங்கள்**

- அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள சிவில் விமானசேவைகள் துறையிற்குரிய சர்வதேச இணைப்புகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்கள் நாளாந்தம் நடைமுறைப்படுத்துவதற்கு

- தடையாணை / கட்டுப்பாடுகளற்ற இலங்கையின் சிவில் விமானசேவைகள் தொகுதி சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையிற்கு மாற்றம் செய்தல்.

- சிவில் விமானசேவையின் உத்தரவாதம், பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் வேலை ஒழுங்கு மற்றும் தனியாள் பாதுகாப்பு உறுதிப்படுத்துதல்

- இலங்கையின் வான்தளத்திலிருந்து இலங்கையின் பிரஜைகளின் நலன்கருதி உச்சளவு பயன்பாட்டினைப் பெறுதல்

- நாட்டினது பொருளாதார அபிவிருத்தி

- வரம்புகளை மீறிய போட்டித்தன்மையினால் ஏற்படும் பொருளாதார வீண்செலவைத் தவிர்த்தல்

- தனிநபர் மற்றும் பண்டங்களின் அணுகல் மற்றும் நகர்வு மேம்படுத்துதல்

- சிவில் விமானசேவைகள் துறையினுள் நம்பகரமான சேவைகளை முன்னேற்பாடு செய்தல்

- சிவில் விமானசேவைகள் துறை தொடர்பான கல்வி

- சிவில் வானூர்தி இயல் தொடர்பான அனைத்து அம்சங்கங்களுக்கும் அனுசரணை வழங்குதல்.

- பொது மக்கள் சுகாதாரம் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

- சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

1946 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுருந்த சிவில் விமானசேவைகள் திணைக்களத்தினை கலைத்து 2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபை சட்டத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து சிவில் விமானசேவைகள் அதிகாரசபை நியதிச்சட்ட தாபனமாக நிறுவப்பட்டது. இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் 154 ஆவது பிரிவின் கீழ் குறித்த கணக்காய்வு நடவடிக்கைகளுக்கென அரசின் நியதிச்சட்ட சபையாக கருதப்படும். சிவில் விமானசேவைகள் அதிகாரசபை எட்டு அங்கத்தவர்களால் ஆனதுடன், அதில் ஐந்து பேர் சிவில்

விமானசேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிப்பதுடன், மூவர் உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்படும்.

இலங்கையின் சிவில் விமானசேவைகள் துறையினது நடவடிக்கைகளை செயல்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள நிறுவனமாக திகழ்வது, சிவில் விமானசேவைகள் அதிகாரசபையாகும். அத்துடன், இலங்கையின் சர்வதேச சிவில் விமானசேவைகள் உடன்படிக்கைகளில் தரப்பினராக செயல்படுவதற்கு இணைந்துள்ள சிக்காகோ உடன்படிக்கையிற்குரிய இணைப்பு 19 இல் அடங்கியுள்ள சர்வதேச சிவில் விமானசேவையின் தரங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்கள் நாட்டினுள் சட்டவாக்கப்படுவதற்கு நடவடிக்கையெடுத்து, செயல்படுத்தக்கூடிய பொறுப்பும் இந்த தாபனத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. அதேபோல தெளிவான மற்றும் சுருக்கமான விமான பாதுகாப்புத் தேவைப்பாடுகள் வழக்கத்தில் பயன்படுத்துவது மற்றும் ஒழுங்குவிதிகளை மேம்படுத்துதல், சட்டமாக்குதல் அல்லது அங்கீகரித்தல், மற்றும் தரங்களை பாதுகாப்பாக செயற்பாட்டில் ஈடுபடுத்துதல் தொடர்பில் செயலாற்றுவதற்கு சிவில் விமானசேவைகள் அதிகாரசபையிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிவில் விமானசேவைகள் அதிகாரசபை சிவில் விமானசேவைகள் அபிவிருத்திக்கு மற்றும் சிவில் விமானசேவையுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு தளத்தகை ரீதியிலான ஆலோசனை வழங்குவதற்கு இணைந்துள்ளது.

## <u>பௌதீக வளர்ச்சி 2014</u>

சர்வதேச சிவில் விமானசேவைத் தரங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களை நாட்டினுள் நடைமுறைப்படுத்தியமையே மீளாய்விற்குட்படும் கால எல்லைக்குள் சிவில் விமானசேவைகள் அதிகாரசபையினால் மேற்கொண்ட பணிகளில் முதலிடம் பெறுகின்றன. மேலும் சிவில் விமானசேவைகள் நிர்வாக நடவடிக்கைகள் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு தொழிற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். அதேபோல அக்காலப் பகுதிக்குள் நிறுவன மீளமைக்கும் தொழிற்பாட்டிற்கு இயைவான நடவடிக்கைகளை மட்டுமன்றி, பதவியணியினரை பயிற்றுவிப்பதனூடாக தாபன கொள்ளளவு மேம்படுத்துவதற்கு முயற்சியெடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக சிவில் விமானசேவை அதிகாரசபையிற்கு தேவையான கட்டிடங்களை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உள்ளக விமானநிலைய அபிவிருத்தியுடன் தொடர்புடைய பாலவீ விமானநிலையத்தின் ஓடுபாதை எளிதான விமானங்களின் தொழிற்பாடுகளுக்காக ஈடுபடுத்திக் கொள்ளும் இயலளவு தொடர்பான முக்கிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு சிவில் விமானசேவைகள் அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இதன் பெறுபேறாக சிவில் விமானசேவைகள் அதிகாரசபை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து ஓடுபாதையின் விரிவுபடுத்தல்கள் மற்றும் மீள நிர்மாணிப்பு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு விமானநிலையத்தில் ஓடுபாதை விரிவுபடுத்துவதற்கும் MA60 ரக 60 பயணிகள் கொண்டு செல்லக்கூடிய விமானமொன்று தொழிற்படுத்துவதற்கும் ஏற்றவகையில் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் சிவில் விமானசேவைகள் அமைச்சின் வழிக்காட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. கல்பிட்டி பிரதேசத்தில் முந்நீர் விமானநிலையமொன்றின் அங்கீகரிப்புச் செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

விமானநிலைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனால் விமானசேவைக் கம்பனிகளுக்கும் இறுதியில் விமானப் பயணிகளுக்கும் பல நன்மைகள் கிடைக்கின்றன. வான் சேவைக் கம்பனிகளின் தொழிற்பாடுகளின் அதிகரிப்பு நாட்டினுள் விமானசேவைகள் வளர்ச்சியின் உறுதியான அறிகுறியாகும். 2014 திசெம்பர் கடைசியாகும்போது இலங்கையின் 09 விமான தொழிற்பாட்டுச் சான்றிதழ் உரிமையாளர்கள் நடைமுறையில் செயல்படுகின்றனர். இந்த தொழிற்பாட்டாளர்களின் இருவர் (02) சர்வதேச விமானப் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைளிலும், ஒரு தொழிற்பாட்டாளர் சர்வதேச சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளிலும், அவற்றில் ஆறு (06) பேர் உள்ளக விமானத் தொழிற்பாடுகளில் மாத்திரமும் ஈடுபட்டுள்ளனர்.

இரு புதிய வெளிநாட்டு வான் தொழிற்பாட்டு கம்பனிகளான றொட்டானா ஜெட் (Rotana Jet), டிரான்ஸ் எயரோவிற்கான (Transaero) வான் தொழிற்பாட்டுச் சான்றிதழ்கள் வெளியிடுவதன் மூலம் சர்வதேச விமானப் பயண வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளது. 43 சேரிடங்கள் வரை

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய மற்றும் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தை பாவனை செய்து 24 விமானசேவைக் கம்பனிகள் வான் பயணங்களை மேற்கொண்டுள்ளன. 2013/2014 மாரிக்காலத்துக்காக நேர அட்டவணையின்றி 06 விமானங்கள் ஐரோப்பாவிலிருந்து உல்லாசப் பயணிகளைக் கொண்டு வந்துள்ளன. அதேபோல இந்த உல்லாசப் பயணிகளின் வருகையின் அதிகரிப்புடன் 2014/2015 மாரிக்காலத்தில் இலங்கைக்கு நேர அட்டவணையின்றி சர்வதேச விமானசேவைக் கம்பனியின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும்.

வான் தொழிற்பாட்டுக் கம்பனிகளை உறுதிபடுத்தும் சந்தர்ப்பத்தில் இருந்த தரங்கள் அவ்வாறே பேணுவதனை உறுதிபடுத்துவதற்காக ராம்ப் பரிசோதனைகள், இடைவழி பரிசோதனை தொழிற்பாடுகள், தலைமையக பரிசோதனைகள், வானோடல் சேவைத் தகவல்கள் மற்றும் ஆராய்ச்சிகள், வான் பயண கட்டுப்பாட்டு பரிசோதனைகள், விமானநிலைய பரிசோதனைகள் உள்ளடங்கலாக 499 கண்காணிப்புகள் மீளாய்விற்குட்படும் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விமானமொன்றின் விமானத் தகைமை மற்றும் வான் பாதுகாப்பை பேணுவது முக்கிய காரணியாகும். சிவில் விமானசேவைகள் அதிகாரசபையில் முக்கியமான பொறுப்பாக அமைவது நாட்டின் விமானசேவைக் கைத்தொழில்துறையில் தொடர்ச்சியான உத்தரவாத செயலாற்றுகையை பேணுவதற்காக தாக்கம் விளைவிக்கும் விமான தகவுத்திறன் பிரிவுகளான விமான போக்குவரத்து தொழிற்பாட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் அல்லது தாபன மேம்பாடுகள், புதுப்பித்தல்கள், விமானங்கள் மற்றும் அதன் பகுதிகளின் பேணுதல்கள், குறித்த நபர்களை பயிற்றுவித்தல் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்வதாகும்.

வான் தகைமைகளுக்குரிய தொழிற்பாட்டு நடவடிக்கைளாக புதிய பதினாறு (16) பதிவு செய்யப்பட்டதுடன், ஐம்பத்து நான்கு விமானங்களின் (54) பதிவு புதுப்பிக்கப்பட்டன. கண்காணிப்பு நடவடிக்கைகள் நூற்று தொண்ணூற்று இரண்டு (192) மேற்கொள்ளப்பட்டதுடன் வேலைத்தள அங்கீகரிப்புகள் பன்னிரண்டு (12) வழங்கப்பட்டுள்ளன. விமான தகைமைச் சான்றிதழ்கள் பதினான்கு (14) வெளியிடப்பட்டுள்ளதுடன், ஐம்பத்து இரண்டு (52) புதுப்பிக்கப்பட்டன. 127 விமானசேவை நிகழ்வுகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன.

வான் பாதுகாப்பு துறையின் பறத்தல்கள், விமான பராமரிப்புகள் மற்றும் விமான நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு சான்றிதழ்களை வெளியிடுதல் மற்றும் அவர்களின் திறமைகள் பெற்றுக் கொள்ளுதல் பிரதான நிர்வாக நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வெளியிடும் தொழிற்பாட்டிற்கு பயிற்சி நிறுவனங்கள், பயிற்சி பாடநெறிகளின் அங்கீகரிப்புகள், குறித்த பரீட்சைகளை நடாத்துதல், தேவைக்கேற்றவாறு ஆலோசகர்கள், பரிசோதகர்கள் அங்கீகரித்தல், எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் ஆகியன உள்ளடங்கப்படும். மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களுக்கு இயைவாக அனுமதிப்பத்திரங்களின் புதுப்பித்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீளாய்விற்குட்படும் காலத்திற்குள் 100 மாணவர் பயிற்சி தொழிற்பாட்டாளர் அனுமதிப்பத்திரங்களும், 64 தனியாள் தொழிற்பாட்டு அனுமதிப்பத்திரங்களும், 62 வர்த்தக தொழிற்பாட்டு அனுமதிப்பத்திரங்களும், 19 தொழில்சார் வான் தொழிற்பாட்டு அனுமதிப்பத்திரங்களும், உள்ளடங்கலாக தனியாள் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் 245 சான்றிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அனைத்து வகைகளுக்குரிய 851 புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 32 விமானங்களைப் பேணுதல் சான்றிதழ்களும், 12வான் பயண கட்டுப்பாட்டுச் சான்றிதழ்களும், 01 பறத்தல் தொழிற்பாட்டாளர் சான்றிதழும் மற்றும் 77 வானறை பணியாள் சான்றிதழ்களும் வெளியிடப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரங்களின் புதுப்பித்தல்களின் கீழ் 404 வான் பராமரிப்பு பொறியியல் அனுமதிப்பத்திரங்களும், 38 வான் பயண கட்டுப்பாட்டுச் சான்றிதழ்களும், 57 வானறை பணியாள் சான்றிதழ்களும் வெளியிடப்பட்டுள்ளன.

வான் கம்பனி தொழிற்பாடுகள், பராமரிப்பு அமைப்பு அங்கீகரிப்புகள் மற்றும் பறத்தல் பயிற்சி பாடசாலை சான்றளிப்புகளுக்குரிய 2014 வருடாந்த கணக்காணிப்பு நடவடிக்கைகளின் 100% பூர்த்திசெய்துள்ளன.

மீளாய்வுக்குட்படும் வருடத்துக்குள் வருடாந்த கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கமைய வான்சேவை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விமானநிலைய பாதுகாப்புச் சேவைகளை உறுதிப்படுத்தும் தொழிற்பாடுகள் விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன. 09 விமானசேவை பாதுகாப்பு முகாமையாளர்கள், 03 விமானசேவை பாதுகாப்பு மதியுரையாளர்கள், மற்றும் 81 விமானசேவை பாதுகாப்பு தடைக்காப்பாளர்கள் (Aviation Security Screeners) அத்தாட்சிப்படுத்தப்பட்டதுடன், குறித்த 490 விமானசேவை பாதுகாப்பு தடைக்காப்பாளர்களின் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன. மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புதிய பயணிகள் முனைய நிர்மாணிப்பு திட்டம் தொடர்பாக சிவில் விமானசேவை அதிகாரசபை செயலாற்றியுள்ளது.

இலங்கையில் போன்று வெளிநாட்டு விமானசேவைக் கம்பனிகளுக்காக புதிய சேரிடங்களின் பாதைகள் திறந்து, பிரசீல், பல்கேரியா, போலாந்து, ஓமான் மற்றும் சர்பியா போன்ற நாடுகளுடன் இரு தரப்பு விமனசேவைக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

106 புதிய வான் போக்குவரத்து கம்பனிகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருப்பதுடன், 444 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன. இது போக்குவரத்துத் துறையில் புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்கு உதவியாக இருக்கும். சுற்றுலாக் கைத்தொழில்துறைக்கு தேவையான சிறப்பான பயிற்சியுடைய மனிதவளத்தை உருவாக்குவதற்காக சிவில் விமானசேவை அதிகாரசபையால் 09 ஆவது மாணவர் குழுவிற்காக ஆசனங்களை ஒதுக்குதல் மற்றும் கட்டணங்களை கணக்கெடுக்கும் முறைத் தொடர்பான பாடநெறி 2014 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டது. அங்கிகரிக்கப்படாத வான் போக்குவரத்துக் கம்பனிகள் மற்றும் உல்லாசப் பிரதிநிதிகளுக்கு எதிராக சமர்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக 1999 மொன்ரியெல் உடன்படிக்கையால் அங்கீகரித்துக் கொண்ட வான் பயணியொருவரின் சரக்குகள் நஷ்டம் அடைந்தபோது வழங்கும் கொடுப்பனவுகள் இலங்கைக்குள்ளேயும் வலுப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை வரையுள் முறைப்படுத்தும் நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டது. அது 2014 ஆம் ஆண்டிறுதியில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட துணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டதுடன், 2015 ஆம் ஆண்டில் சட்டபூர்வமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படும்.

சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் விடயப்பரப்பினை நோக்கின், அதில் சிறப்பு பெறுவது மனித வள அபிவிருத்தித் தேவைப்பாடுகளுக்காக பணியாளர்களுக்கு வழங்கும் பயிற்சி நடவடிக்கைகளேயாகும். இங்கு தாபன தொழில்நுட்பம் மற்றும் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்காக தயாரிக்கப்பட்ட விஷேட பயிற்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இந்த திட்டத்தை உபயோகித்து நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும், தொழில்நுட்ப அதிகாரிகளுக்கும் பொதுவாக நோக்கின் ஏனைய அனைத்து தரங்களிலுமுள்ள ஊழியர்களுக்கும் வருடாந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று அனைத்து வருடங்களிலும் அதிகாரசபையின் அங்கீகாரத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். இந்த வருடத்துக்குள் 71 வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும், 148 உள்நாட்டு பயிற்சி வாய்ப்புகளும் முறையே ரூ. 13.1 மில்லியன் மற்றும் ரூ. 1.3 மில்லியன் செலவில் வழங்கியுள்ளன. இதற்கு மேலதிகமாக உலக விமானசேவைக் கைத்தொழிலுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்பதற்காக ரூ 11.7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன.

பகுதி அரச நிறுவனமாக அரச கொள்கைகளுக்கு இயைவாக சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் தாபன திட்டமிடல் தொழிற்பாட்டிற்காக இப்போதைக்கு முகாமைத்துவ திட்டமிடல் மற்றும் சம்பள ஆணைக்குழுவுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு இருப்பதுடன் இன்னும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படவில்லை.

சிவில் விமானசேவைகள் அதிகாரசைபயின் பதவியணியினரது சட்டங்கள் மற்றும் நிர்வாக தொழிற்பாட்டு விதிக்கோவையின் (SLCAP 5000) அடங்கியுள்ள காரணங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கிணங்க திருத்தங்களுக்கு பதவியணியினரது சட்டங்கள் மற்றும் நிர்வாக தொழிற்பாட்டு விதிக்கோவைக்கு உட்படுத்தியதன் பின்னர் திறைசேரியின் அங்கீகாரத்துக்கு முன்ரவைக்கப்பட்டது.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் 2014 ஓகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது..

மேலும் சிவில் விமானசேவைகள் அதிகாரசபையால் எதிர்காலத்தில் தேவைப்படும் விமானசேவைத் துறைக்கு வேண்டிய ஆளணியை அதிகரிப்பதற்கான கருத்திட்டமொன்று தொடங்கியுள்ளது. சிவில் விமானசேவைத் துறைத் தொடர்பான அறிவு பாடசாலை சிறார்கள் மத்தியில் பகிர்ந்து வழங்குவதற்காக சிவில் விமானசேவை அபிவிருத்தி மற்றும் கல்வி குழு நிறுவப்பட்டது.விமானசேவைகள் தொடர்பாக மாணவர்கள் மத்தியிலுள்ள அறிவை மேம்படுத்தும் நோக்கில் சிவில் விமானசேவைகள் அதிகாரசபையால் அச்சிடப்பட்ட ''குவன்செர'' காலாண்டு சஞ்சிகை உயர்தரம் வகுப்புக்களை நடாத்தும் 2808 பாடசாலைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இனங்கண்டுகொள்ளப்பட்ட வேறு நிறுவனங்கள் 486 இற்கும் வழங்கப்பட்டுள்ளன.

மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய நிர்மாணிப்புடன், விமானசேவைகள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமை பொறுப்புகள் மிகவும் வினைத்திறனான மற்றும் தளராது நிறைவேற்றுவதற்குத் தேவையான தாபனத்தின் கிளை நிறுவனம் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 2014 ஜுன் மாதத்தில் திறந்துவைக்கப்பட்டது.

சிவில் விமானசேவைகள் அதிகாரசபையிற்குரிய தலைமை கட்டிடம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வளாகத்தில் நிர்மாணிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுப்பதற்கான தொழில்நுட்ப மதிப்பாய்வு தற்போது மேற்கொண்டு வருகின்றது.


சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் பரிசோதகர்கள் மற்றும் பதிவியணியின் தேவைக்கேற்றவாறு தங்குவதற்காக 04 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் பெப்ருவரி மாதம் வீரவிளையில் ஆரம்பித்துள்ளதுடன், அதன் நிர்மாணப் பணிகள் 2014 ஒக்டோபர் மாதம் முடிவுசெய்யப்பட்டது.

## வருமான /செலவுக் கூற்று


2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான

| | ரூபா (மி ) |
|---|---|
| **வருமானம்** | 1,474 |
| இலங்கையிற்கு வெளியே விற்பனை செய்த வான் நுழைவுச் சீட்டுக்களுக்கான உபரிவரி | 1,160 |
| கப்பலேற்றும் வரி விதிப்பு | 137 |
| முறைப்படுத்தும் சேவைகளின் மூலமான வருமானங்கள் | 60 |
| வட்டி வருமானம் | 104 |
| ஏனைய வருமானங்கள் | 13 |
| **செலவுகள்** | 347 |
| | |
| பதவியணியனர் செலவுகள். | 169 |
| கூட்டங்கள் / செயலமர்வுகள் / மாநாடுகள் | 15 |
| பயிற்சிகள் | 10 |
| நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் | 131 |
| தேய்மானம் | 22 |
| | |
| **வரி செலுத்துவதற்கு முன்னர் பொது அலுவல்களிலிருந்து கிடைத்த இலாபம்** | 1,127 |
| **வருமான வரி** | 314 |
| **வரி செலுத்தியதன் பின்னரான தேறிய இலாபம்** | 813 |
| | |
| வரி மற்றும் ஒதுக்கங்களின் பின்னரான இலாபம் | 813 |
| வருட ஆரம்பத்தின் இலாபம் (01.01.2014) | 390 |
| திறைசேரியின் திரட்டு நிதியத்திற்கு பங்கேற்றல் | (250) |
| பொது ஒதுக்கத்திற்கு மாற்றம் செய்தல் | (715) |
| மறு மதிப்பீடு ஒதுக்கத்திற்கு செய்த சீராக்கம் | 5 |
| **முன் கொண்டு செல்லும் இலாபம்** | 243 |

***மூலம்- உள்ளக புள்ளிவிபரவியல் -சிவில் விமானசேவைகள் அதிகாரசபை***




*மூலம்- உள்ளக புள்ளிவிபரவியல் -சிவில் விமானசேவைகள் அதிகாரசபை*




*மூலம்- உள்ளக புள்ளிவிபரவியல் -சிவில் விமானசேவைகள் அதிகாரசபை*

# இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

**செயல்நோக்கு**

“ஆசிய பிராந்தியத்திலேயே செயற்திறனுடனும், சிறந்த நட்புணர்வுடனும் முதல்நிலை விமானசேவை மையமாக திகழ்தல்”.

**செயற்பணி**

“நாம் அயரா உழைப்புடன் அனைத்து தொழிற்பாடுகளினூடாக போட்டியடிப்படையிலான வான் போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதும், எமது தாபனத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களின் மனநிறைவினை உறுதி செய்வதேயாகும்”.

**நிறுவனத்தின் நோக்கங்கள்**

1. இடைநிற் பயணிகளின் எண்ணிக்கை மொத்த பயணிகளின் எண்ணிக்கையின் வீதம் நிகழ்காலத்தில் 1:6 இலிருந்து 2016 ஆண்டாகும்போது 1:4 வரை அபிவிருத்தி செய்து பண்டாரநாயக்க சருவதேச விமானநிலையம் ஆசியா போரொழிப்பு பிராந்தியத்தினுள் பயணிகள் இடைநிற் மையமாக உருவாக்குதல்.
2. 2016 ஆகும்போது கையாளக்கூடிய 12 மில்லியன்கள் பயணிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
3. 2016 ஆம் ஆண்டாகும்போது தரையிறங்கும் விமானமொன்றுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக ஏற்கப்படுகின்ற செலவினங்களில் 13% இனை குறைத்தல்.
4. 2015 ஆகும்போது கையாளப்படும் வான் பயணிகளின் அளவு 9மில்லியன்கள் வரை அதிகரித்தல்.
5. 2015 ஆகும்போது மொத்த வான் சரக்கு அளவிலிருந்து (பண்டாரநாயக்க சருவதேச விமானநிலையம் மற்றும் மத்தளை இராஜபக்ஷ சருவதேச விமானநிலையம்) 40% இடைவழி சரக்குகளாக மாற்றியமைத்தல்.
6. சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையத்தினுள் பிராந்திய ரீதியிலான ஒத்துழைப்பு 10% இனால் அதிகரித்துக்கொள்ளுதல்.
7. பிராந்தியத்தினுள் படிநிலைகளை உயர்துவதற்குரிய நிலைமைகளை பேணுதல்.
8. ஆகாயவிமான நிகழ்வுகளில் தரையிறக்கும் நடைமுறையினை பேணுதல்.
